முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள், வெள்ளிக்கிழமை
IA.No.5/2025
இன்
O.S No.674/2010
-----

கருத்தமாயன் (இறப்பு)
அதிவீரராமபாண்டியன் (இறப்பு) ... 1, 2 வாதிகள்

1) சீதையம்மாள்
2) சிவக்குமார்
3) செந்தில்குமார்
4) சுரேஷ்குமார்
5) நாகஜோதி
6) மேரிராணி
7) சிவக்குமார்
8) சிவகாமி ... மனுதாரர்கள்/ 3 முதல் 10 வாதிகள்

/ எதிர்/

மாயக்காள் (இறப்பு) ... 2ம் பிரதிவாதி

1) பிச்சைமணி ... 1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி
2) ராஜசேகர்
3) முத்துமணி
4) சிவனம்மாள்
5) ஜெயலெட்சுமி ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 19.01.2026ம் தேதி என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்

திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் மனுவில் கூறப்பட்டுள்ள 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒரு தரப்பினர்களாக இல்லாத நிலையில், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள AS No.36/2023ல் இறுதி தீர்ப்பு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள OS No.674/2010ல் உள்ள நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1) இந்த வழக்கு 1, 2 வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது என்றும், அவர்கள் வழக்குச் சொத்தை மனுதாரருக்கு விற்ற பிறகு, இங்குள்ள பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை மனுதாரர் வைத்திருப்பதிலும் அனுபவிப்பதிலும் தலையிட முயன்றனர் என்றும், எனவே, மனுதாரர் நிரந்தரத் தடை உத்தரவு பெற வேண்டி OS No.557/2012 இல் ஒரு தனி வழக்கைத் தாக்கல் செய்ததாகவும், OS No.557/2012 வழக்கு விசாரிக்கப்பட்டு, 18.04.2023ம் தேதியன்று திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக, திருமங்கலம் சார்பு

நீதிமன்றத்தில் AS No.36/2023 மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்ததாகவும், அது நிலுவையில் உள்ளது என்றும், இரண்டு வழக்குகளிலும் உள்ள பிரச்சினை ஒன்றுதான் என்றும், எனவே AS No.36/2023 ஐ முடிக்கும் வரை அசல் வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க உத்தரவு வழங்க வேண்டி இந்த மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், OS No.674/2010ல் உள்ள நடவடிக்கையை நிறுத்தி வைக்க கேட்டிருக்கும் பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எதிர்மனுதாரர்களின் அதிக பட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்று கூறி ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

3. இந்த மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

4. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள AS No.36/2023ல் இறுதி தீர்ப்பு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள OS No.674/2010ல் அனைத்து நடவடிக்கையை நிறுத்தி வைக்க உத்தரவு வழங்க வேண்டுமா என்பதே ஆகும்.

5. எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகளின் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவரின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைப்பதற்கு மனுதாரர்கள் கூறிய காரணங்கள் தெளிவற்றவை மற்றும் சட்டப்பூர்வமாக நிலையானவை அல்ல என்றும், இந்த மனு, அசல் வழக்கின் நடவடிக்கைகளில் மேலும் தாமதத்தை ஏற்படுத்தும் வகையில் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கோரினார்.

6. மனுதாரர்கள் மனுவில் கூறப்பட்டுள்ள 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒரு தரப்பினர்களாக இல்லை. இந்நிலையில், மனுதாரர்கள் இம்மனுவில் அசல் வழக்கில் தரப்பினர்களாக இல்லாத நபர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படியாகவும் இல்லை. அதன்படி, இம்மனுவானது உரிய முறையிலும், சட்டப்படியாகவும் வடிவமைக்கப்படாமல் உள்ளது. மேலும், மாண்புமை திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் AS No.36/2023 மேல்முறையீட்டு மனு நிலுவையில் இருப்பதாகவும், மேற்படி மேல்முறையீட்டு மனுவில் உள்ள பிரச்சினையும், அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையும் ஒன்றாக இருப்பதால், மேல்முறையீட்டு மனு எண் AS No.36/2023 தீர்மானிக்கப்படும் வரை அசல் வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டி CPC பிரிவு 10ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி, AS No.36/2023 மேல்முறையீட்டு மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையும், அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட

வேண்டிய பிரச்சினையும் ஒன்று என்பதை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை. இந்நிலையில், மனுதாரர்கள் மனுவில் கூறப்பட்ட அசல் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க சட்டப்படியான காரணங்கள் உள்ளதாக மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மேலும் இம்மனுவானது உரிய முறையில் மற்றும் சட்டப்படியான முறையில் வடிவமைக்கப்படாத நிலையிலும், அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையிலும், அசல் வழக்கு 2010 முதல் நிலுவையில் இருந்துவருவதை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது நிராகரித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 23.01.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.23 16:17:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு</u>** :

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை

2. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை

4. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.23 16:17:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

I.A.No. 5/2025
in
OS.No.674/2010
Order
D.D. 23.01.2026